இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 3
இறுதிப் பரீட்சை- 2021/2022

**LLU 3904/LWU 1412 – சட்ட முறைமை**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 27 ஜனவரி 2023 காலம்: மு.ப 09.30 – பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08.

பகுதி I இல் இருந்தும் பகுதி II இல் இருந்தும் இரண்டு (02) வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி I – உரோமன் சட்டம்

1. 45 வயதான உரோம பிரஜையான யூலியஸ் தனது தந்தையின் இறப்பின் பின்பு தனது குடும்ப தாதையாக வந்தான். யூலியஸ் மற்றும் அவனது மனைவி குளோடியா இருவருக்கும் இரண்டு மகள்மாரும் ஒரு மகனும் இருந்தனர். யூலியஸ் தனது தந்தையிடம் இருந்து சில சொத்துக்களை மரபுரிமையாக பெற்ற போதிலும் மோசமான முதலீடுகள் மற்றும் ஆதனங்களின் பிறழ் முகாமைத்துவம் காரணமாக அவனுடைய செல்வத்தின் பெரும்பகுதியை இழந்தான். தனது குடும்பத்தை பராமரிக்க இயலாமையினால், யூலியஸ் தனது மூத்த மகள் சில்வியாவை இரத்தினக்கல் வியாபாரி ஒருவருக்கு விற்பனை செய்தான். அதன்பின்பு, யூலியஸ் அவனுடைய இளைய மகளான கெமிலியாவை அவளுடைய விருப்பத்திற்கு மாறாக அவளை விட 25 வயது மூத்தவனான மனைவியை இழந்த செல்வந்தர் ஒருவருக்கு திருமணம் செய்து கொடுக்க ஏற்பாடுகளை செய்தான். தனது மகன் நீரோ செனற்றருடைய குதிரை தொழுவங்களில் தொழுவ பணியாளாக பணிபுரிந்து சம்பாதித்த பணத்தை யூலியஸ் எடுத்ததுடன் சூதாட்டம் காரணமாக அப்பணத்தை இழந்தான். 65 வயதான உரோம பிரஜையான உபானோ இறுதியில், யூலியஸை ஒரு ஏகாதிபத்திய கட்டளையூடாக மகவேற்பு (adrogated) செய்தான்.

   (அ) சில்வியா, கெமிலியா மற்றும் நீரோ தொடர்பில் யூலியஸ் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வலிதாந்தன்மையை ஆராய்க.

   (14 புள்ளிகள்)

   (ஆ) யூலியஸ் குடும்பம் மீதான உபானோவுடைய மகவேற்பின் விளைவுகளை ஆராய்க.

   (06 புள்ளிகள்)

2. கீழே தரப்பட்ட கூற்றில் ஏதேனும் **ஒன்றின்** (01) மீது விமர்சித்து கருத்துரைக்க.

   (அ) 'உரோமன் சட்டம் வழியுரிமை தொடர்பான விடயங்களை போதுமானளவில் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளது.'

(ஆ) 'ஆதனங்களுடைய *(res)* சொந்தத்தை கைகொள்ளும் முறைமைகள் இயற்கை உரிமைகள் (*Ius Naturale*) மற்றும் சர்வதேச சட்டம் (*Ius Gentium*) ஆகிய இரண்டின் கீழும் உருவானது.'

(20 புள்ளிகள்)

3. உரோமுக்கு வெளியேயுள்ள கிராமம் ஒன்றில் உள்ள அடுத்தடுத்த காணிகளில் போலினஸ் மற்றும் கஸ்கா இருவரும் வீடுகளை நிர்மாணித்தனர். போலினஸ் உடைய காணியில் நீரை பெறுவதற்கான வழிவகை எதுவும் இல்லாத காரணத்தால் கஸ்காவுடைய காணியில் இருந்து நீரை பெறுவதற்கான உரிமையொன்று போலினஸக்கு வழங்கப்பட்டது. தனது மனைவியின் இறப்பையடுத்து, போலினஸ் அவ்விடத்தில் இருந்து அகன்று அவனுடைய பெற்றோருடன் சென்று வசிக்க தொடங்கியதுடன் தனது வீடு மற்றும் காணி மீது தனது நண்பனான அந்தோனியோவிற்கு பயனல உரிமையை (*usufruct*) வழங்கினான்.

கீழே தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் உள்ள சட்ட நிலைமையை விளக்குக:

(அ) ஒவ்வொரு முறையும் தலா ஒரு வெள்ளி காசை அந்தோனியோவிற்கு செலுத்தும் வரை தனது காணியில் இருந்து அவனுடைய நீரைப் பெறும் உரிமையை கஸ்கா தடுத்தான்.

(06 புள்ளிகள்)

(ஆ) அந்தோனியுடைய காணியில் இருந்து சில கர்வாலி மரங்களை (Oak Tree) வெட்டி திருமணத்திற்கு தயாராகும் தனது சகோதரிக்கு தளபாடங்களை தயாரித்தான்.

(இ) அந்தோனியோவின் வீட்டின் ஒரு பகுதியை பழ வியாபாரிக்கு மாதாந்தம் 25 வெள்ளி காசு என்ற அடிப்படையில் வாடகைக்கு வழங்கியதுடன் விவசாயத்துக்காக விரிவாக்கும் நோக்குடன் காணியின் எல்லை சுவரை இடித்தான்.

(08 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றின் மீது குறிப்பெழுதுக.

(அ) *re* ஒப்பந்தங்கள் (Contracts *re*) : மற்றும்

(ஆ) ஜஸ்டியனியனால் இனங்காணப்பட்ட நான்கு தீங்கியல்கள்

(10 x 02 = 20 புள்ளிகள்)

## பகுதி II – சட்ட முறைமை

5. "… 'சட்ட தோற்றுவாய்கள்' என்ற பதம் பல்வேறு அர்த்தங்களில் பண்படுத்தப்படலாம்….. அனேகமான சந்தர்ப்பங்களில் 'தோற்றுவாய்' என்ற பதம் சட்டத்தின் உண்மையான உள்ளடக்கத்தை தீர்மானிக்கும் நாட்டின் நிறுவனங்களை குறிக்க பயன்படுத்தப்படுகிறது…"

(சட்ட முறைமை பகுதி I, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பக்கம் 19.)

இலங்கையின் சட்ட தோற்றுவாய்களின் பின்னணியுடன் மேலே தரப்பட்ட கூற்றினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

6. செலினியா அரசினுடைய துப்பாக்கிகள் மற்றும் ஏனைய தாக்குதல் ஆயுதங்கள் கட்டுப்பாட்டு சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் செலினியாவின் அரச பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட உரிமம் இன்றி எந்தவொரு நபரும் துப்பாக்கிகள், வெடிமருந்துகள், அல்லது ஏதேனும் வகையான வெடிப்பொருட்களை இலாப நோக்கிற்காக விற்பனை செய்தல் குற்றச்செயல் ஒன்றாகும் என எடுத்துரைக்கிறது. இங்கு கூறப்பட்ட சட்டத்துக்கு அமைவாக, அத்தகைய குற்றம் ஒன்றிற்கான தண்டனையாக குறைந்தபட்சம் இருபது வருட காலப்பகுதிக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

செலினியா இராணுவத்தின் போர்வீரர் ஒருவரான ரிச்சட், தனக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியை தனது தந்தையின் இருதய சத்திர சிகிச்சைக்கு ஏற்பட்ட பணத்தேவையை பூர்த்தி செய்வதற்காக விற்பனை செய்தான். ரிச்சட் இச்சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டான்.

நியதிச்சட்டங்களின் பொருள்கோடல் தொடர்பான விதிகளுடன் தொடர்புறுத்தி ரிச்சட் உடைய நிலையை ஆராய்க. இயைபான தீர்ப்புச் சட்டத்துடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

7. "…..பொதுச்சட்ட எண்ணக்கருவான நீதிமுறை முற்தீர்ப்பு (அதிகளவில்) மற்றும் குடியியல் சட்ட எண்ணக்கருவான உரைமுற்தீர்ப்பு ஆகிய இரண்டினாலும் இலங்கை செல்வாக்கு செலுத்தப்பட்டுள்ளது என கூற முடியும்…"

(Cooray, L.J.M, *An Introduction to the Legal System of Sri Lanka*, Page 156)

இலங்கையில் நீதிமுறை முற்தீர்ப்பு பிரயோகம் தொடர்பில் மேலே தரப்பட்ட கூற்றில் பிரதிபலிக்கின்ற நிலைமை சரியானதாக அமைகின்றதா?

தீர்ப்புச்சட்ட உதாரணங்களை குறிப்பிட்டு விமரிசித்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

8. ஜோசப் என்பவன் தனது வாழ்வாதாரத்திற்காக பலவகையான தீண்பண்டங்கள் மற்றும் இனிப்பு பண்டங்களை வெலிகொட நகரில் உள்ள வீதியோரத்தில் அமைந்துள்ள கடையின் வெளிப்புற பகுதியில் உள்ள சாக்கடை ஒன்றின் மேற்புறத்தில் வைத்து விற்பனை செய்து வருகின்ற ஒரு தெரு வியாபாரி ஆவான். ஜோசப் தனது தந்தை அதே இடத்தில் ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் நடாத்தி வந்த அதே வியாபாரத்தை தனது தந்தையிடம் இருந்து பின்னுரித்தாளராக பெற்று நடாத்தி வருகிறான். பதினைந்து வருடங்களுக்கு முன்பு அவனுடைய தந்தை இந்தியாவில் வேளாங்கன்னியின் பெசிலிக்காவுக்கு தல யாத்திரை சென்றிருந்த வேளை இவ்வியாபாரம் 10 நாட்களுக்கு மாத்திரம் நடைபெறவில்லை. வெலிகொட மாநகரசபை, அண்மையில் ஜோசப் சாக்கடையின் மேற்புறம் வைத்து உணவுப்பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்து வருவதன் மூலம் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவதாக குறிப்பிட்டு அவ்விடத்தில் இருந்து வியாபாரப் பொருட்களை அகற்றுமாறு கட்டளையிட்டது.

ஜோசப் வீதியோரத்தில் உணவுப்பண்டங்களை காட்சிப்படுத்தி, விற்பனை செய்யும் நடைமுறை மாநகரசபை கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பிருந்து நீண்ட காலமாக இருந்து வருகின்ற நடைமுறை எனக்குறிப்பிட்டு இக்கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்தான். இந்த நடைமுறை ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் எவருக்கும் எந்தவித இடையூறும் இன்றி தொடர்ந்து இருந்து வருகின்ற நடைமுறை என்ற காரணத்தினால், உணவுப் பண்டங்களை காட்சிப்படுத்தல் மற்றும்

விற்பனை செய்தல் ஒரு உரிமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் அவன் குறிப்பிட்டான்.

ஜோசப் ஒரு வலிதான வழக்காறு ஒன்று நிலவி வருகின்றது என்பதை எண்பிக்க முடியுமா?

உள்நாட்டு வழக்காறு ஒன்றை அமுல்படுத்த நீதிமன்றங்கள் கையாளுகின்ற பரீட்சைகளுடன் தொடர்புறுத்தி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது